அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2015

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக** (5 புள்ளிகள்)

1. ஆதரவற்றவன் ______________________ + ______________________
2. உலகப்புகழ் ______________________ + ______________________
3. ஒருவருக்கொருவர் ______________________ + ______________________
4. நாட்டியக்கலை ______________________ + ______________________
5. பொற்றகடு ______________________ + ______________________

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு எதிர்ப்பொருள் கொண்ட சொற்களை எழுதுக.** (5 புள்ளிகள்)

1. இருள் = ______________________________________________
2. உண்மை = ______________________________________________
3. பழையது = ______________________________________________
4. விருப்பு = ______________________________________________
5. தோற்றம் = ______________________________________________

**(இ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் கோடிடப்பட்டுள்ள இடங்களிற் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

(10 புள்ளிகள்)

1) பாரதிதாசன் குடும்பவிளக்கு என்னும் ______________________ இயற்றியுள்ளார்.

2) குமரன் சுற்றுலா செல்வதற்கு அவனின் தாயார் __________________ தெரிவித்தார்.

3) பொன்னைத் தவிர மற்ற உலோகங்கள் யாவும் நாளடைவில் நிறம் ________________________________.

4) எந்த ஒரு நாடும் அதன் உள்விவகாரங்களிற் பிறநாடு _____________________________ விரும்புவதில்லை.

5) காடுகளில் வாழும் சில உயிரினங்களின் ___________________________ குறைந்து வருவது ஆய்வாளர்களைக் கவலைக்கு ஆளாக்கியுள்ளது.

6) அளவுக்கு மிஞ்சினால் _______________________________ நஞ்சு.

7) உற்ற தோழர்களிடையேயும் அவ்வப்போது _______________________________ ஏற்படுவது இயல்பு.

8) பட்டுப்பூச்சியின் வாயிலிருந்து ________________________________ ஒருவகை நீரே பட்டு நூலாக மாறுகிறது.

9) எவ்வளவுதான் கற்றறிந்த போதிலும் ஒருவருக்குச் சிறப்பை அளிப்பது அவரது ________________________________.

10) தேன்மொழி எழுதிய தமிழ்க் கட்டுரையிலே பிழைகள் ________________________________ காணப்பட்டன.

**(ஈ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொற்களின் கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. மக்கள் குளிர்காலத்தில் அணிவதற்குக் கம்பளி ஆடையே **உகந்தது**.

அ. அழகானது ஆ. சூடானது இ. ஏற்றது ஈ. உயர்ந்தது

2. மீனாவிற்கு இசைக்கலையில் நாட்டத்தை ஏற்படுத்த அவளுடைய தாயார் மிகவும் **ஆசையாக** இருந்தார்.

அ. கவனமாக ஆ. தவிப்பாக இ. விருப்பமாக ஈ. ஊக்கமாக

3. பழங்காலத் தமிழ் மன்னர்கள் பலர் அறநெறி **பிறழாது** ஆட்சி செய்ததை இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிய முடிகிறது.

அ. இல்லாது ஆ. தவிர்த்து இ. குறையாது ஈ. தவறாது

4. வீட்டிற்கு **அண்மையில்** நான் படிக்கும் பாடசாலை இருப்பதால் எனக்கு மிகவும் வசதியாக இருக்கின்றது.

அ. தூரத்தில் ஆ. தொலைவில் இ. சமீபத்தில் ஈ. வெளியில்

5. கடமை உணர்வோடு நாம் செயற்பட்டால் விரைவிலே எதையும் **இலகுவாகச்** செய்துவிடலாம்.

அ. சிறப்பாகச் ஆ. எளிதாகச் இ. சுறுசுறுப்பாகச் ஈ. வெற்றிகரமாகச்

6. அன்னை திரேசாவின் தன்னலமற்ற தொண்டுக்கு இந்த **ஞாலமே** தலை வணங்கியது.

அ. நாடே ஆ. உலகமே இ. கண்டமே ஈ. இயற்கையே

7. மக்களுக்குச் சேவை செய்தோரை எல்லோரும் **போற்றினர்**.

அ. வாழ்த்தினர் ஆ. தூற்றினர் இ. வேண்டினர் ஈ. வரவேற்றனர்

8. குமரனின் பெற்றோர் அவன் சுற்றுலா செல்வதற்கு **இசைந்தனர்**.

அ. மறுத்தனர் ஆ. தயங்கினர் இ. கண்டித்தனர் ஈ. இணங்கினர்

9. நம்முடைய **ஆற்றல்** சிலவேளைகளில் நமக்கே தெரியாமற் போவதுண்டு.

அ. சேம்பல் ஆ. ஆர்வம் இ. திறமை ஈ. பெருமை

10. பழந்தமிழர்கள் **உணவை** உண்ணும்பொழுது எல்லோருடனும் பகிர்ந்து உண்பார்கள்.

அ. நீரை ஆ. பழங்களை இ. ஆகாரத்தை ஈ. காற்றை

**(உ) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் பாவித்து அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைக்கவும்.**

(20 புள்ளிகள்)

அ. **வெல்லம்:** …………………………………………………………………………

……………………………………………………………………………………..

**வெள்ளம்:** …………………………………………………………………………

……………………………………………………………………………………..

ஆ. **தோல்:** ……………………………………………………………………………

……………………………………………………………………………………..

**தோள்:** ……………………………………………………………………………

……………………………………………………………………………………..

இ. **கரி:** ……………………………………………………………………

……………………………………………………………………………………..

**கறி:** ……………………………………………………………………

……………………………………………………………………………………..

ஈ. **இரங்கு:**…………………………………………………………………..

……………………………………………………………………………………..

**இறங்கு:** ……………………………………………………………………

……………………………………………………………………………………..

உ. **மலை:** ……………………………………………………………………

……………………………………………………………………………………..

மழை: ..........................................................................

..........................................................................................

## பகுதி 2

**(ஊ) பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்தபின் கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**
(25 புள்ளிகள்)

தற்காலத்தில் பிள்ளை வளர்ப்பு முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதை நாம் குழந்தைப் பராமரிப்பு நிலையங்களுக்கும் பாலர் வகுப்புகளுக்கும் அரசாங்கம் அளித்துவரும் முக்கியத்துவத்திலிருந்து அறிந்துகொள்கிறோம். இன்று பிள்ளைகள் நவீன தொழில்நுட்பம் விருத்தி அடைந்துவரும் தேசங்களில் வளர்கின்றனர். அவர்களுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுத் தருவதிலும் நவீன உலகத்திற்கு ஏற்றவர்களாக அவர்களை வளர்ப்பதிலும் பெற்றோர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அதே நேரத்தில் நம்மிற் பலர் அவர்களுக்கு அளிக்க வேண்டிய முக்கியமான ஒரு செல்வத்தை அவர்களுக்குக் கொடுத்து வளர்க்கத் தவறிவிடுகிறார்கள். இளம் பிள்ளைகளுக்கு நாம் அளிக்கவேண்டிய அந்த மிகப் பெரிய செல்வமானது எமது பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் உள்ளடக்கிய சிறந்த விழுமியங்களே! அவை எத்தகையனவாக இருந்தபோதிலும் அவை நம் குழந்தைகளின் சிறந்த வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான செல்வம் ஆகும்.

சிறந்த நாகரிகப் பின்னணியில் வாழும் பிள்ளைகள் எப்பொழுதும் உயர்ந்த மனிதர்களாகின்றார்கள். சிறந்த நாகரிகம் என்பது செல்வச் செழிப்பையோ நவீன வளர்ச்சியையோ அல்லது வெளிப்பகட்டுடன் கூடிய ஆடம்பரத்தையோ குறிப்பது அல்ல. எல்லோரிடமும் அன்பாகப் பழகுவது, பணிவோடு நடப்பது, பெரியவர்களுக்கு மரியாதை கொடுப்பது, சிறியவர்களுக்கு விட்டுக் கொடுப்பது, வீட்டுக்கு வருவோரை மனமுவந்து வரவேற்பது, விருந்தோம்பல் செய்வது போன்ற பண்புகளே சிறந்த நாகரிகத்திற்குரிய விழுமியங்கள் ஆகும். இந்தப் பண்புகளை வெறும் வார்த்தைகளால் மட்டும் சொல்லிக் கொடுப்பதில் எந்தவொரு பயனும் இல்லை. அவற்றைப் பெற்றோர்கள் இயற்றும் அன்றாடச் செயல்கள் மூலம் குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டும். நம் பிள்ளைகள் பலருடன் பழக வாய்ப்பளிக்க வேண்டும். உறவினர்களையும் நண்பர்களையும் நம் வீட்டுக்கு அழைப்பதாலும் அவர்கள் வீட்டு நிகழ்ச்சிகளுக்கு நாம் செல்வதாலும் நம் பிள்ளைகள் பல நன்மைகளைப் பெறுகிறார்கள். இவற்றின் மூலம் குடும்பத்தின்மீதும் உறவுகள்மீதும் பிள்ளைகளுக்கு நல்லிணக்கத்துடன் கூடிய பிணைப்பு ஏற்படுகிறது. வளரும் பிள்ளைகளுக்கு இந்தப் பிணைப்பு மிகவும் அவசியம். இந்தப் பிணைப்பு இளம் வயதிலேயே ஏற்படாத காரணத்தாலேதான் இளைஞர்களின் பிற்கால வாழ்வில் அவர்களுக்குப் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. சிலர் பருவ வயதில் உறவு தேடும்பொழுது

தகாதவர்களுடன் நட்புக் கொள்கிறார்கள். சிலர் பெரியவர்கள் ஆக வளர்ந்த பின்பும் ‘குடும்பம்’ என்ற பற்றுதல் இல்லாமல் வாழ்கிறார்கள்.

பண்டிகைகள், விழாக்கள் ஆகியவற்றைக் கொண்டாடும் வழக்கம் பிள்ளைகளுக்குக் கலாசார நாட்டத்தை ஏற்படுத்துகிறது. பண்டிகைகள் எதுவாக இருந்தாலும், கொண்டாடும் முறை எப்படி இருந்தாலும் நமது பாரம்பரிய விழாக்களைக் கொண்டாட வேண்டும். பண்டிகைகளின் போதும் விழாக்களின் போதும் தூரத்து உறவினர்கள் வீட்டுக்கு வருவார்கள். அவ்வாறு வருகை தரும்போது அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. இதன்வழி உறவுகளைப் பிள்ளைகள் தெரிந்து கொள்வார்கள். அவர்களை மீண்டும் சந்திக்கும்போது உறவுப்பிணைப்பு அதிகரிப்பதோடு வலுவடைகிறது. இது குழந்தைகளுக்கு மகிழ்ச்சியைத் தருவதோடு பாதுகாப்பையும் தருகிறது. எனவே எமது முன்னோர் காலங்காலமாகப் பாதுகாத்து வந்த விழுமியங்களை எமது பிள்ளைகள் கற்றறிந்து உணர்ந்து கடைப்பிடிக்கப் பழக்குதல் பெற்றோரின் தலையாய கடமையாகும்.

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இன்று பெற்றோர் எவற்றிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்? எவற்றை மறந்துவிடுகிறார்கள்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. எவற்றைச் சிறந்த நாகரிகம் என்று கட்டுரையாசிரியர் கருதுகிறார்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

3. முறையாக வளர்க்கப்படாத பிள்ளைகளுக்கு எவ்வித பிரச்சனைகள் ஏற்படும்?

4. எதற்காக ஒன்றுகூடும் நிகழ்ச்சிகள் தேவை எனக் கட்டுரையாசிரியர் கருதுகிறார்?

5. எமது விழுமியங்களைப் பாதுகாக்க என்ன வழிமுறைகளை எடுக்கலாம் என நினைக்கிறீர்கள்?

**(எ) கீழே தரப்பட்ட கட்டுரையையோ அல்லது கீழுள்ள குறிப்பை வாசித்தது அதற்கமைய ஒரு கடிதத்தையோ எழுதுக.** (25 புள்ளிகள்)

1) நீர் கோடைகால விடுமுறைக்கு வெளிநாடு சென்று வந்திருக்கிறீர். சென்ற நாட்டில் உங்களைக் கவர்ந்த காட்சிகளை விளக்கி இந்தியா அல்லது இலங்கையில் வசிக்கும் உங்கள் ஒன்றுவிட்ட சகோதரனுக்கு 200 சொற்களுக்குக் குறையாது ஓர் கடிதம் வரைக.

**அல்லது**

2) எமது இயற்கைச் சூழலைப் பாதுகாக்க நாம் எடுக்கக்கூடிய வழிமுறைகளை விபரித்துச் சஞ்சிகை ஒன்றுக்கு 200 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக?